| கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சை, 2015 டிசம்பர் |
|---|
| **கிறிஸ்தவம் II** |

* **முதலாம் வினாவுக்கும்**, **மேலும் நான்கு** வினாக்களுக்குமாக **மொத்தம் ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

**01. (i) சிறப்புமிகு விசேட பிள்ளைப் பேறுகளைப் பற்றி காபிரியேல் தூதரிடமிருந்து நற்செய்தியைப் பெற்றுக்கொண்ட இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. அவற்றிற்கு இருவரும் கொடுத்த மாறுத்தரங்கள் யாவை?**

***விடை:***

செக்கரியா, மரியாள் 1

செக்கரியா ஆச்சரியமடைந்தார், ஆனால் அதை நம்பவில்லை. இதனால் ஊமையானார். மரியாள் தாழ்மையோடு இறைக்கட்டளையை ஏற்றுக்கொண்டாள். **1**

**(ii) "<u>அறுவடை</u> மிகுதி, <u>வேலையாட்களோ</u> குறைவு. ஆகவே தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்.**

**(a) இவ்வார்த்தைகளை இயேசுவானவர் யாரிடம் கூறினார்?**

**(b) தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ள சொற்களை விளக்குக.**

***விடை:***

இயேசுவானவர் 70 சீடர்களுக்கு கூறியது. 1

அறுவடை – வார்த்தையை கேட்க காத்து இருக்கும் மக்கள் 1

வேலையாட்கள் - இறைப் பணியாளர்கள்

**(iii) (a) லூக்கா நற்செய்தி நூலின்படி "அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலை" வைத்திருப்பவர்கள் யார்?**

**(b) இயேசுவானவர் அவர்களுக்கு எதிராக முன்வைத்த முக்கிய குற்றச்சாட்டு என்ன?**

***விடை:***

மறைநூல் அறிஞர்கள் 1

மக்களுக்கு முறையான போதனையைக் கொடுப்பதற்குப் பதிலாக சுமக்க முடியாத சட்டங்கள் மூலம் அவர்களைத் துன்பப்படுத்தினர். 1

**(iv) இயேசுவானவர் தமது திருப்பணியின்போது குழந்தைகளுக்கு நன்மதிப்பை வழங்கி**

**a) இயேசுவானவர் இவ்வாறு கூறியது எப்போது?**

**b) இதிலிருந்து வெளிப்படும் உண்மை என்ன?**

*விடை:*

கெத்சமனேத் தோட்டத்தில் சீடர்களுடன் ஜெபிக்கச் சென்றபோது 1

ஜெபத்தின் மூலமாக சோதனைகளை வெற்றிகொள்ள முடியும். 1

**(ix) a) எருசலேம் திருச்சபை மகாநாடு கூட்டப்பட்டதற்கான காரணம் என்ன?**

**b) அதற்குத் தலைமை தாங்கியவர் யார்?**

*விடை:*

பிற இனத்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போது யூதர்கள் அதனை நிராகரித்து, பிற இனத்தவர்கள் விருத்தசேதனம் பெற வேண்டும் என்ற போது 1

யாக்கோபு / பேதுரு 1

**(x) ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கான பெற்றோரினதும் பிள்ளைகளினதும் பொறுப்புகள் ஒவ்வொன்று எழுதுக.**

*விடை:*

பெற்றோரிடையே அன்பும், ஒற்றுமையும் காணப்படுதல், அனைத்து பிள்ளைகளையும் சமமாக ஏற்றுக் கொள்ளுதல், பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிதல் - உதவி செய்தல்.

**(2x10 = 20புள்ளிகள்)**

**02. (i) "மெசியா"என்ற வார்த்தையின் கருத்து என்ன? எருசலேம் இறை மாளிகையில் பாலகனை மெசியாவாக இனங்கண்டு கொண்டவர் யார்?**

**(ii) இயேசுவின் பெயரில் அவரின் பெற்றோர் நிறைவேற்றிய மூன்று யூத பழக்கங்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.**

**(iii) இன்று இலங்கையில், கிறிஸ்தவ பழக்கவழக்கங்களும் சமயச் சடங்குகளும் பிறரைக் கவரும் வண்ணம் எவ்வாறு நிறைவேற்றப்படலாம்?**

*விடை:*

(i) அருட்பொழிவு பெற்றவர் / அபிஷேகம் செய்யப்பட்டவர், சிமியோன், அன்னா 2

(ii) 8 ஆம் நாள் விருத்தசேதனம் செய்தல் / பெயரிடுதல்
40 ஆம் நாள் ஆலயத்தில் அர்ப்பணித்தல்
12 வயதில் பஸ்காப் பண்டிகையில் பங்கு கொள்ளுதல் 3

(iii) திருமுழுக்கு – சிறுவராகவோ, வளர்ந்தோராகவோ நீரினால் திருமுழுக்குப் பெற்று தூயஆவியின் வழிகாட்டலை எதிர்பார்த்தல்

| | | |
|---|---|---|
| **பெயர் சூட்டல்** | - | அந்நாளில் பெயர்சூட்டி ஆலயத்தில் ஏற்றுக் கொள்ளுதல். |
| **புதுமனை புகுதல்** | - | பால் பொங்குதல், திருமறைப் பகுதியை வாசித்து ஆசீர்வதித்தல். |
| **தமிழ் சிங்கள புதுவருடம்** | - | பால்சோறு தயாரித்தல், பலகாரங்கள் போன்றவற்றோடு பிறமதத்தாரோடு பகிர்ந்து கொள்ளுதல். |
| **நத்தார் பண்டிகை** | - | பரிசு, பலகாரங்களை பிற மதத்தாரோடும் தேவையுள்ளோரோடும் பகிர்ந்து கொள்ளுதல். |

5

**(10 புள்ளிகள்)**

**03. (i) இயேசுவானவர் தமது திருப்பணியை எந்நகரத்தில் ஆரம்பித்தார், செபாலயத்தில் எந்த இறைவாக்கு நூலில் இருந்து இயேசுவானவர் தமது திருப்பணி பற்றி வாசித்தார்?**

**(ii) அவர் அங்கு வாசித்தவற்றை தமது திருப்பணியின் போது எவ்வாறு நிறைவேற்றினார் என்பதனை உதாரணங்களுடன் குறிப்பிடுக.**

**(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவை போன்று இன்றைய சமூகத்தில் காணக்கூடிய அவ்வாறான சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் போது கிறிஸ்தவர்கள் எவ்வாறு செயற்படலாமென விளக்குக.**

***விடை:***

(i) இயேசு தனது பணியை கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரில் ஆரம்பித்தார்.

ஏசாயா இறைவாக்கிய நூலை வாசித்தார். 2

(ii) **ஏழைகளுக்கு நற்செய்தி** – அவர்களுக்கு நற்செய்திகூறி அவர்களின் எதிர்பார்ப்பில் புதிய நம்பிக்கையைக் கொடுத்தார்.

**துன்புறுவோரின் விடுதலை** – பலவிதமாக சட்டங்கள், வரி சுமைகளோடு இருந்த மக்களுக்கு ஆறுதல் அளித்து உதவியுரிந்தார்.

**அடிமைகளுக்கு விடுதலை** – சட்டங்கள் மூலமாகவும் அடிமைப்பட்டிருந்த பெண்கள், பிள்ளைகள், நோயாளிகள் போன்றோரின் சமுதாயக் கட்டுப்பாடுகளைத் தகர்த்து சமுதாயத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள இடமளித்தார்.

**குருடருக்குப் பார்வை** – உடல் ரீதியாக பார்வை இழந்தோருக்கு பார்வை அளித்தார். அவர்கள் அவரைப் பின்பற்றினர். பாவத்தினால் பார்வையற்றோர், வரி அறவிடுவோர், பரிசேயர் போன்றோரின் தவறுகளை உணர்த்தி நல்வழிக்கு இட்டுச் சென்றார். சீடர்களையும் மெய்யான வழியில் நடத்தினார்.

(iii) **ஏழைகள்** - இவர்களின் தேவைகளை சந்தித்து நற்செய்தியளித்தல்.

**துன்புறுவோர்** – தொழிலாளர், பலவித தொழிற்சாலைகளில் பணிபுரிவோர், தோட்டப்பகுதிகளில் தமது உடல் உழைப்பால் துன்புறுவோர், தொழிலுக்காக வெளிநாடு சென்று அங்கு அவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் உரிமைகள் போன்றவற்றிற்கு குரல் கொடுத்து அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்கு வழிவகுத்தல்.

**அடிமைகள்** - செல்வத்திற்கும் அதிகாரத்திற்கும் லௌகீகத்திற்கும் அடிமையாக வாழ்வோர்; மது, போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி காணப்படுவோர், அதில் இருந்து விடுதலை பெற வழிகாட்டி மறுவாழ்வளிக்க உதவுதல், திருச்சபைகள், பல சமய நிறுவனங்கள் மூலமாக வழிகாட்டல்.

**பார்வையற்றோர்** – பாவத்திற்குள்ளாகி, இறை வார்த்தைக்கு குருடராய் இருந்து செயல்படுவோருக்காக ஜெபித்தல். இறை வார்த்தையை அறிவதில் ஈடுபடச் செய்தல். 5

**(10 புள்ளிகள்)**

**04. மனித உரிமைகள் மீறப்படுகின்றன என நாம் தொடர்ந்து கேள்வியுறுகிறோம்.**

**(i) இயேசுவானவரின் கால சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட குழுக்களில் இரண்டைப் பற்றி சுருக்கமாக விளக்குக.**

**(ii) அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட குழுவினருக்காக இயேசுவானவர் செயற்பட்டு சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றுக்கொடுத்த மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.**

**(iii) இலங்கையில் மக்கள் முகங்கொடுக்கும் ஒடுக்கு முறைகள் ஐந்தைக் குறிப்பிட்டு, அவ்வாறான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவரின் பிரதிச் செயல்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென விளக்குக.**

***விடை:***

(i) இம்சைகளுக்கும், துன்பங்களுக்கும் இலக்கான மக்கள் குழுவினர்.

பெண்கள், துன்புறுவோர், நோயாளர் (உளரீதியாக பாதிக்கப்பட்டோர்) தீய ஆவியுள்ளோர், பாவிகள்

2

(ii) உ + ம்

1. பெண்களை சீடர்களாகத் தெரிவு செய்தல், இறையரசின் காரியங்களில் பங்குதாரராக செயல்படல்.
2. நோயாளரைக் குணமாக்கி மீண்டும் சமுகத்துக்குள் கொண்டு வருதல்.
3. பாவிகளை மன்னித்து நல்வழியில் ஈடுபடச் செய்தல்.
4. ஒதுக்கப்பட்ட சமாரியரைப் போன்ற குழுவினரை சமமாக ஏற்றுக்கொள்ளச் செய்தல். 3

(iii) **அழிவுகளால் பாதிக்கப்பட்டோர்** – அகதி முகாம்களில் உள்ளோரின் மனநிலையை மாற்றியமைத்து அவர்களின் மறுவாழ்வை கட்டி எழுப்புவதற்கு உதவுதல்.

**பெண்கள் துஷ்பிரயோகம்** - ஆண், பெண் இருவருக்கும் விழிப்பூட்டல்

**சிறுவர் துஷ்பிரயோகம்** - பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய சரியான அறிவுரைகளை வழங்குதல். அதற்கான துண்டு பிரசுரங்களை வெளியிடுதல்.

தோட்டத் தொழிலாளர் / தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் முறையான ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்கும் குரல் கொடுத்தல். பொருளாதார ரீதியில் தொழில் இல்லாமல் துன்புறுவோரின் முன்னேற்றத்திற்கு திருச்சபை, சமூக நிறுவனங்கள் மூலம் உதவி புரிதல். 5

**(10 புள்ளிகள்)**

05. **(i)** **புனித பவுல் சிறைக்கைதியாகச் சென்ற உரோம பிரயாணத்தின் போது முகங்கொடுத்த பிரச்சினைகள் இரண்டைச் சுருக்கமாக எழுதுக.**

**(ii)** **ஆபத்துக்களின் மத்தியில் பவுல் எவ்வாறு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதை விளக்குக.**

**(iii)** **ஆபத்துக்கள், பிரச்சினைகளின் மத்தியில் பவுல் வழங்கிய தலைமைத்துவப் பண்புகளின் அடிப்படையில், இன்று கிறிஸ்தவர்கள் பிரச்சினைகளின் மத்தியில் எவ்வாறு செயற்பட வேண்டுமென விபரிக்க.**

***விடை:***

(i) பவுல் உரோமைக்கு சிறைக் கைதிகளோடு சென்றார். சைப்ரஸ் தீவின் அருகில் புயல் காற்றுக்கு எதிராகப் பயணம் செய்தார்கள். பவுலின் கருத்தை கவனத்திற் கொள்ளாத மாலுமி முன்னோக்கிப் பயணித்தமையால் கப்பல் வாடைக்கொண்டல் என்னும் புயலில் சிக்கியது. கப்பலில் உள்ள பொருட்கள் அகற்றப்பட்டது. பல நாட்கள் சாப்பிடாமல் பயத்தோடு இருந்தனர். கப்பல் மோதி உடைந்தது. பவுல் அனைவரையும் தப்பி கரையேற்றுவதற்கு உதவி புரிந்தார். அங்கு அவர்கள் தீ மூட்டி குளிர் காய்ந்து கொண்டிருந்தபோது ஒரு பாம்பு அவரின் கையைத் தீண்டியது. எனவே அவர்கள் அவனைக் கொலைப் பாதகன் என எண்ணினர்.

2

(ii) **பவுல் கொடுத்த முன்மாதிரியும், தலைமைத்துவமும்**

- பவுல் கைதியாகப் பயணம் செய்தாலும் கடலில் ஏற்படும் காலநிலைகளையும், ஆபத்துக்களையும் பற்றி அறிவுறுத்தினார்.
- பொருட்களுக்கும், உயிருக்கும் ஆபத்து ஏற்படும் எனவும் எச்சரித்தார்.
- அவரோடு இருந்தவர்களை தைரியப்படுத்தி உணவருந்தும்படி செய்தார்.
- தான் வழிபடும் கடவுள் அனைவரையும் பாதுகாப்பார். உயிருக்கு ஆபத்து ஏற்படாது என உறுதியளித்தார்.
- அவர்களோடு அப்பத்தை பகிர்ந்து கொண்டார்.
- மால்த்தா தீவின் மக்களின் உபசரிப்பால் அதிபதியின் தந்தையையும், அநேக நோயாளர்களையும் சுகப்படுத்தினார்.

3

(iii) **ஆபத்துக்களின் முன்னால் கிறிஸ்தவர்களின் செயல்பாடு**

- உடனடியாகச் செயல்படுவதற்கு முன் வருதல்.
- தலைமைத்துவத்தை மேற்கொண்டு பிறரைத் தைரியப்படுத்தல்.
- தைரியத்தோடு செயல்படுவதை உணர்த்துதல்.
- பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்போருக்கு உதவி செய்தல்.
- கடவுளுக்கு சான்று பகர்தல்.
- ஆபத்துக்கு முகம் கொடுப்போருக்காக ஜெபித்தல். 5

**(10 புள்ளிகள்)**

06. **(i)** **இயேசுவானவரின் அழைப்பினைப் பெற்ற சீமோன் பேதுருவும், மத்தேயுவும் அளித்த மாறுத்தரங்கள் எவ்வாறிருந்தன?**

**(ii)** **இயேசுவானவர் அன்றைய யூத சமுதாய நிலைப்பாடுகளைத் தாண்டிச் சென்று சீடத்துவத்திற்கு அழைத்தமை பற்றிய மூன்று விசேட பண்புகளை முன்வைக்க.**

**(iii)** **இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கென அழைக்கப்பட்ட நம்மிடமிருந்து, இயேசுவானவர் எதிர்பார்ப்பது யாதென விளக்குக.**

***விடை:***

(i) **சீமோன் பேதுருவின் மாறுத்தரம்** - தனது தகுதியற்ற நிலையை இயேசுவின் முன் அறிக்கை செய்து, அவருக்கு அளிக்கப்பட்ட புதுப் பணியில் அடி எடுத்து வைத்தார்.

**மத்தேயு** – வரிப்பணம் சேகரிக்கும் இடத்தில் அழைக்கப்பட்டார். உடனடியாக இயேசுவைப் பின் சென்றார்.

2

(ii) **இயேசு சீடர்களை அழைத்த போது காணப்பட்ட விசேடப் பண்புகள்**

- அவர்கள் தொழில் செய்த இடங்களுக்குச் சென்று அழைக்கப்பட்டார்கள்.
- எவ்வித தராதரமும் பாராது சமுதாயத்தில் வெவ்வேறு பிரிவுகளின் மத்தியில் இருந்து தெரிவுசெய்யப்பட்டார்கள்.
- பெண்களும் பணிக்கு அழைக்கப்பட்டு அவரைப் பின்பற்றினர்.
- இஸ்ரயேலரின் 12 கோத்திரங்களைப் போன்று 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர்

3

(iii) **கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக இன்றைய சமுதாயத்தில் அழைக்கப்படுபவர்களிடம் எதிர்பார்க்கப்படுவது** –

- அனைத்து மக்கள் பிரிவினரையும் சமமாக ஏற்றுக்கொண்டு அனுசரித்தல்.
- சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட மக்களிடையே பணி செய்தல்.
- நோயாளர்களுக்காக ஜெபித்து அவர்களுக்கான உதவிகளைப் புரிதல்.
- தமது திறமைகளை நற்செயல்களுக்காக பயன்படுத்தல்.
- அன்பும், இரக்கமும் காண்பித்து அர்ப்பணிப்பான சேவையில் ஈடுபடுதல்.
- இறைவார்த்தையால் தேவையான சந்தர்ப்பங்களில் பெலப்படுத்தல்.

5

**(10 புள்ளிகள்)**

07. **(i)** **யூத சமுதாயத்தில் பரிசேயர்களின் நிலை, தராதரம் என்ன? அவர்களின் ச பணிகளுக்கு மத்திய நிலையமாக இருந்த பொது இடம் எது?**

**(ii)** **பரிசேயனாகிய சீமோனின் இல்லத்தில் இயேசுவானவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேளையில் கைவிடப்பட்ட மூன்று யூத வழக்கங்களை எழுதுக.**

**(iii)** **பரிசேயரின் வெறுமையான ஆன்மீகத்தைப் புறக்கணித்து இயேசுவானவர் செயற்பட்ட முன்மாதிரியைப் பின்பற்றி சமுதாயத்தில் கிறிஸ்தவர்கள் நாம் செயற்படக்கூடிய ஐந்து வழிமுறைகளை விளக்குக.**

***விடை:***

(i) சமுதாயத்தில் தங்களை வேறுபடுத்திக் காட்டிய தனிக் குழுவினராக காணப்பட்டனர்.

சமுதாயத்திலும், சமயக் காரியங்களிலும் தம்மை செல்வாக்குடையவர்களாகக் காண்பித்தனர்.
சினகோக், ஜெப ஆலயங்கள் அவர்களின் மத்திய நிலையமாகும்.

சட்டத்தை விளக்கினர். புதிய உப சட்டங்களைச் சேர்த்துக் கொண்டனர். வெளித்தோற்றத்தில் தம்மை நீதிமான்களாகக் காண்பித்தனர்.

2

(ii) **சீமோன் இல்லத்தில் கைவிடப்பட்ட 3 யூத வழக்கங்கள்**

பாதங்களைக் கழுவுதல்
தலையில் எண்ணெய் வைத்து அபிஷேகித்தல்
முத்தமிட்டு அனைவரையும் வரவேற்றல்

3

(iii)
1. தான தர்மம் செய்யும் போது அமைதியாக இரகசியமாகச் செய்தல்,
2. சமய காரியங்களை, பகிரங்கமாக வெளிப்படுத்தாமல் அவற்றை கடவுளின் மகிமைக்காக செயல்படுத்தல்.
3. இலங்கையின் சிறப்பான பண்பாடுகளை ஏனைய மக்களோடு இணைந்து: கிறிஸ்தவ விழுமியங்களைப் பாதுகாத்து செயல்படுத்தல்.
4. தமக்கெதிராக செயல்படுபவர்களுக்காக ஜெபித்தல். அவ்வாறானவர்களை சிநேகித்து இரக்கம் காட்டுதல்.
5. தாழ்மையாக சமுதாயப் பணியில் ஈடுபடுதல்.

5

**(10 புள்ளிகள்)**